


கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு. கழக துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆகியோர் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொருளாளர் முன்னாள் விழுப்புரம் நகர மன்ற தலைவர் விழுப்புரம் இரா.ஜனகராஜின் புதல்வர் அருண்குமாரின் திருமணத்தையொட்டி நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்கள். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி சக்கரை, நகராட்சித் துறை அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.

### சேலத்தில்

# வனத்துறை சார்பில் விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், நவ.19-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மனித - வன உயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்தார் .

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மனித வனஉயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை சேலம், மணக்காடு, காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலை யில் தொடங்கி வைத்தார்கள். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் வன உரிமைகளைப் பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மனித - வன உயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்றையதினம் தொடங்கி வைக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அரசாணையின்படி தமிழ்நாடு முழுவதும் 20,000 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வனப்பாதுகாப்பு, வனஉயிரின கனக்கெடுப்பு, வனத்தீ மேலாண்மை மற்றும் மனித வன உயிரின மோதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு முழுவதும் 11 ஆம் வகுப்பு அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 20,000 நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பில் காடுகள், காட்டுயிர்கள் பாதுகாப்பு - சவால்களும் தீர்வுகளும், வனப்பாதுகாப்பு, காட்டுத்தீ மேலாண்மை, காட்டுயிர்கள் கணக்கெடுப்பு உள்ளிட்ட தலைப்பில் வகுப்புகள் எடுக்கப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 1,500 மாணவ, மாணவியர்களும், இதர 37 மாவட்டத்தில் 500 மாணவ, மாணவியர்கள் வீதம் மொத்தம் 18,500 மாணவ, மாணவியர்கள் ஆக மொத்தம் 20,000 மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளித்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 25 ஆசிரியர்களை தேர்வு செய்து ஒவ்வொரு ஆசிரியரும் 20 மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து குழந்தைகளை வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் தொடக்கமாக சேலம் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 25 ஆசிரியர்களுக்கு 17.11.2025 முதல் 18.11.2025 ஆகிய இரண்டு நாட்கள் தொடர்ந்து பயிற்சி அளித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு ஒரு மாத காலம் பயிற்சி அளித்தும் மாணவ, மாணவியர்கள் கற்றல் திறன் அறிந்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்படுவார்கள்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக வனத்துறை சார்பில் மனித - வன உயிரின மோதல் குறித்தான விழிப்புணர்வு கையேட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மேயர் ஆ. இராமச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, சேலம் ஓமலூர் சமூக காடுகள் வனச்சரக அலுவலர் திருமதி ரா.வீரமணி, உயிரியலாளர் முனைவர் இரா. பிரவீன்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பணிச்சுமை – நேரமின்மை – வயதைக் கடந்து சாதனை!

# கல்விபெறத் துடிக்கும் அனைவருக்கும் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறந்த முன்மாதிரி!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



சென்னை,நவ.19-

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு “முனைவர்” பட்டம் பெற்றது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

When leaders learn, generations dream bigger!

**என் நண்பனின் இடத்தில் இருந்து பெருமையுடன் மகிழ்கிறேன்! “முனைவர்” பட்டம் பெற்றுள்ள பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**கல்வியே நமது உயர்வுக்கான வழி; அதிலும் ஆராய்ச்சிப் படிப்பு வரை நமது தமிழ்நாட்டு மாணவர்கள் முன்னேற வேண்டும் என்ற எனது சொல்லை, எனது அமைச்சரவையிலும் - குடும்பத்திலும் இருந்து கடைப்பிடித்திருக்கிறார் திரு. அன்பில் மகேஸ்.**

**பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றிக் கொண்டே முனைவர் பட்டம் பெற்றுள்ள அவர், பணிச்சுமை - நேரமின்மை - வயது ஆகியவற்றைக் கடந்து கல்விபெறத் துடிக்கும் அனைவருக்கும் 'Role Model' ஆகிவிட்டார்!**

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் கிண்டி சுற்றுச்சூழல் பூங்காவில்

# தோட்டக்கலை நாற்றங்கால் மற்றும் தன்ஹோடா விற்பனை நிலையம்!

சென்னை, நவ. 19 -

கிண்டி சுற்றுச்சூழல் பூங்காவில் உள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையினால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால் மற்றும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் விற்பனை நிலையமானது சுற்றுச்சூழல் மற்றும் தோட்டக்கலை ஆர்வலர்களின் வார இறுதியை இயற்கையுடன் செலவிடும் விருப்பமான இடமாக வேகமாக வளர்ந்து வருகிறது.

கிண்டியில் அமையவுள்ள சுற்றுச்சூழல் பூங்காவிற்குள் அமைந்துள்ள இந்த நாற்றங்கால், பல்வேறு வகையான அலங்கார தாவரங்கள், பழ மரக்கன்றுகள், மருத்துவ செடிகள், உட்புற தாவரங்கள், பூர்வீக மர வகைகள் மற்றும் துறையால் தயாரிக்கப்படும் உயர்தர நடவுச்செடி களை காட்சிப்படுத்தும் கூடமாக விளங்குகிறது. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை நிர்வகிக்கும் விற்பனை நிலையம், மலிவு விலையில் உயிர் உரங்கள், உயிரி கட்டுப்பாட்டு பொருட்கள், மண் கலவைகள், விதைகள் மற்றும் தோட்டக்கலை கருவிகள் போன்ற தோட்டக்கலை சார்ந்த உள்ளீடுகளையும் விற்பனைக்கு வழங்குகிறது.




தோட்டக்கலை அதிகாரிகள் கூறுகையில் இந்த முயற்சி மக்களின் வாழ்க்கையினை பசுமையுடன் செலவிட ஊக்குவிக்கவும், நகர்ப்புறங்களில் தோட்டக்கலையை ஊக்குவிக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு தரமான நடவுச்செடிகள் வழங்குவதை உறுதி செய்யவதையும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற ஊழியர்களிடமிருந்து தோட்டக்கலை, தாவர பராமரிப்பு மற்றும் வீட்டுத் தோட்டம் குறித்த அடிப்படை வழிகாட்டுதல்களை பார்வையாளர்கள் பெற்று பயன்பெறும் திடலாகவும் இந்த நாற்றங்கால் செயல்படுகிறது என தெரிவித்தனர்.

சுற்றுச்சூழல் பூங்கா அமையவுள்ள இடத்திற்கு அருகில் வருகை தரும் பொதுமக்கள், நாற்றங்கால் பண்ணைக்கு வருகை தந்து, நேர்த்தியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தாவர வகைகள் பார்வையிட்டு பயன் பெற்று வருகின்றனர். பருவ கால பூக்கும் தாவரங்கள், மொட்டை மாடித் தோட்டங்களுக்கான மரக்கன்றுகள் மற்றும் அலங்கார செடிகள் மக்களிடையே பிரபலமடைந்து வருவதால், விற்பனை நிலையத்திற்கு வருகை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பொதுமக்களின் ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க, நேரடி செயல் விளக்கங்கள் மற்றும் தோட்டக்கலை விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட சிறப்பு விளம்பர நடவடிக்கைகளையும் தொடங்கிட தோட்டக்கலை துறை திட்டமிட்டுள்ளது.

சென்னையில் பசுமைப் பரப்பை அதிகரிப்பது, நகர்ப்புற தோட்டக் கலையை ஊக்குவித்தல் மற்றும் தன்னிறைவான சுற்றுச் சூழல் பொழுது போக்கு இடங்களை உருவாக்குதல் ஆகிய அரசாங்கத்தின் உயரிய இயற்கை சார்ந்த நோக்கங்களை உறுதி செய்யும் விதமாக இந்த விற்பனை நிலையம் அமைந்துள்ளது என துறை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

சுற்றுச்சூழல் பூங்கா தோட்டக்கலை நாற்றங்காலை பார்வையிடவும், பல்வேறு தாவர வகைகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறவும் தோட்டக்கலைத் துறை பொதுமக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது. மேலும் விவரங்களுக்கு +91 98400 72385 மற்றும் +91 99402 45997 ஆகிய எண்களை தொடர்புக்கொள்ளவும்.

மேலும் தோட்டக்கலை நாற்றங்கால், விற்பனை மையம் மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கும் பணிகளை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குனர் பெ. குமரவேல் பாண்டியன் 15.11.2025 அன்று ஆய்வு செய்து அவற்றை மேம்படுத்திட உரிய அறிவுரைகள் வழங்கினார். ஆய்வின் போது தோட்டக்கலை துணை இயக்குனர், சென்னை செ. பாலசுப்பிரமணியம் மற்றும் இதர துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வே.ஆனந்தம் அவர்கள், வேளச்சேரி மேற்கு பகுதிக் கழகச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **கே.நீலகண்டன்** (10/488, பட்டினத்தார் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை-600 037) அவர்கள் சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளர்களாக ஏ.கே.அருணகிரி (5, சி.ஜஸ்வர்யா அப்பார்ட்மெண்ட்ஸ், ராம்நகர் வடக்கு, வேளச்சேரி, சென்னை-600042), ஆர்.சி.குப்பன் (3/201, பஜனை கோவில் தெரு, கொட்டிவாக்கம் குப்பம், சென்னை-600041) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17-11-2025.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### வேளச்சேரி–பரங்கிமலை இடையிலான

# பறக்கும் ரயில் சேவை வரும் ஜனவரி முதல் தொடங்கும்!

## ரயில்வே துறை உறுதி!

சென்னை,நவ.19-

வேளச்சேரி - பரங்கிமலை இடையிலான பறக்கும் ரயில் சேவை வரும் ஜனவரி முதல் தொடங்க உள்ளதாக ரயில்வே அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை கடற்கரை - வேளச்சேரி மேம்பால பாதையில், தினமும் 100 சர்வீஸ் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. வேளச்சேரி - பரங்கிமலை 5 கி.மீ., துாரம் இணைக்கும் வகையில், மேம்பால ரயில் பாதை திட்டப்பணி, 2008ம் ஆண்டில் துவங்கப்பட்டது. ஆனால், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகரில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினையால் பணிகள் முடங்கின.ஒரு வழியாக இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, இந்த தடத்தில் 2022ம் ஆண்டுக்கு பின் மீண்டும் பணிகள் நடந்தன.

கடந்த 17 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த வந்த மேம்பால ரயில் இணைப்பு பணி முடிவுக்கு வந்தது. இதற்கிடையே, வேளச்சேரியில் இருந்து பரங்கிமலைக்கு, 10 பெட்டிகளுடன் சரக்கு ரயில் இயக்கி சோதனை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான கட்டாய சோதனை ஓட்டமும் தொழில்நுட்ப ஆய்வும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும். சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்தவுடன்,

ஜனவரியிலேயே ரயில் சேவை அதிகாரப்பூர்வமாக தொடங்கப்படும் என்று ரயில்வே துறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த ரயில் சேவை தொடங்கினால், வேளச்சேரி, ஆதம்பாக்கம், தில்லை நகர, கங்காநதர் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் பயன்பெறுவர்.



புதுக்கோட்டை மாவட்டம், டி.வி.எஸ். கார்னர், எஸ்.எஸ். திருமண மஹாலில், கூட்டுறவுத்துறையின் சார்பில், 72–வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 16.11.2025 அன்று துவக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




கேரள மாநில தி.மு.க. சார்பில் வர இருக்கும் கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் புனலூர் தொகுதியில் உள்ள புனலூர் நகராட்சித் தேர்தலில் 9 வார்டுகளில் உள்ள வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது . இந்த நிகழ்ச்சிக்கு கொல்லம் மாவட்டக் கழக செயலாளர் ரெஜிராஜ் தலைமை வகித்தார். கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கழக கொடியேற்றி தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் திருவனந்தபுரம் மாவட்டக் கழக செயலாளர் அனீஷ், சுரேஷ், புவனேஷ், ராமர், சதாசிவம் ஆசாரி, ரினுராஜன், ஹரி குமார் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் 9 நகராட்சி வேட்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.